# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## எட்டாம் வகுப்பு

பதிவு எண்: 

நேரம்: 2.30 மணி தமிழ் மதிப்பெண்கள்: 100

THOOTHUKUDI DISTRICT

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 15×1=15

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ................
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
2. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ..............
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்
   இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
3. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ........... யும் ஓட்டிவிடும்.
   அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை
4. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ...........
   அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
5. முதற்பாவலர் என அழைக்கப்படுபவர் ..................
   அ) கம்பர் ஆ) பெருஞ்சித்திரனார் இ) திருவள்ளுவர் ஈ) பாரதி
6. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ....................
   அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை
   இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை
7. கல்வி பயிற்சிக்குரிய பருவம்..............
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
8. 'மலர் பானை வனைந்தாள்' - இத்தொடர் ............ பொருளைக் குறிக்கிறது.
   அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்
9. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு .............
   அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி
10. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............
    அ) அ + களத்து ஆ) ஆக் + களத்து இ) அக்க + அளத்து ஈ) அம் + களத்து
11. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........
    அ) முறையப்படுவது ஆ) முறையெனப்படுவது
    இ) முறை எனப்படுவது ஈ) முறைப்படுவது

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

பண்ணின் தமிழ் இசைபாடலின் பழவெய்முழவு அதிரக்
கண்ணின்ஒளி கனகச்சுனை வயிரம் அவை சொரிய
மண்நின்றன மதவேழங்கள் மணிவாரிக்கொண்டு எறியக்
கிண் என்றுஇசை முரலும் திருக் கேதாரம் என் னீரே.

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் ............
    அ) தேவாரம் ஆ) திருவாசகம் இ) பகவத்கீதை ஈ) மகாபாரதம்
13. இப்பாடலில் சிறப்பிக்கப்படும் நகரம்..............
    அ) காசி ஆ) இராமேஸ்வரம் இ) திருக்கேதாரம் ஈ) உத்ரகாண்ட்

14. இப்பாடலில் குறிப்பிடப்படும் இசைக்கருவிகள்

அ) புல்லாங்குழலும் முழவும் ஆ) முழவும் மத்தளமும்

இ) மத்தளமும் உடுக்கும் ஈ) உடுக்கும் பம்பையும்

15. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

## பகுதி - II

### *பிரிவு - அ*

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**(வினா எண் 21க்குக் கட்டாயமாக விடையளிக்க)** **4×2=8**

16. *விடைகளுக்கேற்ற வினா அமைக்க :*

அ) காலை உணவைத் தவிர்த்தல் கூடாது.

ஆ) நாம் பேச்சிலும் எழுத்திலும் சில மரபுத் தொடர்களைப் பயன்படுத்துகிறோம்.

17. மருத்துவம் எப்போது தொடங்கியது?

18. 'தாய்நாடு' என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

19. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கனை எழுதுக.

20. சந்திப்பிழை என்றால் என்ன?

21. 'விடல்' என முடியும் குறட்பாவினை எழுதுக.

### *பிரிவு - ஆ*

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22. *மரபுத் தொடர்களைத் தொடர்களில் அமைத்து எழுதுக:*


அ) வாழையடி வாழையாக ஆ) எடுப்பார் கைப்பிள்ளை

23. *உரிய இடத்தில் நிறுத்தற்குறிகளை இடுக:*

அ) தமிழ்மொழி செம்மையானது வலிமையானது இளமையானது

ஆ) கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்.

24. *படத்திற்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக:*



25. *ஒரு சொல் ஒரே தொடரில் பலபொருள் தருமாறு எழுதுக :*

அ) திங்கள் ஆ) ஆறு

26. *பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக:*

அ) அதைச் செய்தது நான் அன்று.

ஆ) பகைவர் நீவீர் அல்லர்

27. *பொருத்தமான பன்மை விகுதிகளை எழுதுக:*

அ) பல் ஆ) வாழ்த்து

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

28. *பின்வரும் இசைக்கருவிகளின் பெயர்களை அகரவரிசைப்படுத்துக:*
படகம், தவில், கணப்பறை, பேரியாழ், உறுமி, உடுக்கை, தவண்டை, பிடில், நாகசுரம், மகுடி

## பகுதி - III

### *பிரிவு - அ*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×3=6**

29. உழவுத்தொழில் பற்றித் தகடூர் யாத்திரை கூறுவன யாவை?
30. மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி எழுதுக.
31. உரைப்பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:
பூமிக்குள் புதைந்த தாவர இனங்களும், விலங்கினங்களும் அழுகி, மட்கிப் பழுப்பு நிலக்கரியாக மாறுகின்றன. இது மின் உலைகளிலும் ஊது உலைகளிலும் எரிபொருளாகப் பயன்படுகிறது. உலோக உருக்குத் தொழிலிலும் பயன்படுகிறது. தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டம் நெய்வேலியிலும் புதுச்சேரியின் சில பகுதிகளிலும் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. இது தஞ்சை, பெரம்பலூர், சிவகங்கை, நீலகிரி, திண்டுக்கல், திருவள்ளூர், கன்னியாகுமரி மாவட்டங்களிலும் குறைந்த அளவு காணப்படுகிறது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. இங்குக் கிடைக்கும் நிலக்கரி அனல் மின்சாரம் தயாரிக்க உதவுகின்றது.
**வினாக்கள் :**
   1. நிலக்கரி எவ்வாறு உண்டாகிறது?
   2. பழுப்புநிலக்கரி தமிழ்நாட்டில் எங்கெங்கு கிடைக்கிறது?
   3. எங்குக் கிடைக்கும் நிலக்கரி அனல்மின்சாரம் தயாரிக்க உதவுகிறது?

### *பிரிவு - ஆ*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.**
**(வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** **2×3=6**

32. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
33. தமிழ்வழிக்கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?
34. செறிவு ............. பொறுத்தல் என்னும் நல்லந்துவனார் பாடல்

### *பிரிவு - இ*

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க:** **2×3=6**

35. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?
36. ஏவல்வினைமுற்றுக்கும், வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
37. வல்லினம் மிகாத்தொடர்கள் ஐந்தனை எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :** **5×5=25**

38. அ) புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



(அல்லது)

ஆ) கொங்கு நாட்டின் உள்நாட்டு வணிகம் குறித்து எழுதுக.

39. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

40. *கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக :*




1. எந்த நாளை முன்னிட்டுப் புத்தகக் கண்காட்சி நடத்தப்படுகிறது?
2. புத்தகக் கண்காட்சி எங்கு நடைபெறுகிறது?
3. புத்தகக் கண்காட்சி எத்தனை நாள்கள் நடைபெறுகிறது?
4. புத்தகக் கண்காட்சிக்கான நுழைவுக்கட்டணம் எவ்வளவு?
5. புத்தகம் வாங்குவோருக்கு வழங்கப்படும் சலுகை யாது?

41. கல்வியின் பயன்களாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

42. *கலைச்சொல் தருக :*

1. Ornament 2. Vowel 3. Bud 4. Herbs 5. Talent

43. *கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக :*

நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **3×8=24**

44. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

ஆ) "காலம் உடன் வரும்" கதையை சுருக்கி எழுதுக.

46. அ) முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை.

---------

AMEER TUITION CENTRE
KAYALPATTANAM
PH: 9488005009

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com